


நாவெளி
NAAVELI
# நாவெளி




பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்
ප්‍රාදේශීය ලේකම් මාසික ඉ - සඟරාව
NAVITHANVELI DIVISIONAL SECRETARIAT MONTHLY E-MAGAZINE
www.navithanveli.ds.gov.lk moha.divi.navithanveli@gmail.com DSNavithanveli 0755424333

மலர்: 12 ✦ இதழ்:21 ✦ 2024ஆம் வருடம் மார்கழி மாதம் இருபத்தைந்தாம் திகதி


## பாடசாலை மாணவர்களுக்கான விவாத மற்றும் சிறந்த அறிவிப்பாளருக்கான போட்டி நிகழ்வு



நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாடசாலைகளின் கலாசார மன்றங்கள் மற்றும் திறந்த பிரிவினருக்குமான விவாத மற்றும் சிறந்த அறிவிப்பாளருக்கான போட்டி நிகழ்வானது **2024** டிசம்பர் **04**ஆந் திகதியன்று நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இப் போட்டி நிகழ்விற்கு நடுவர்களாக அறிவிப்பாளர் திரு. கு. கிலசன், சிறிலங்கா யுனிக் நிறுவன பொது முகாமையாளர் திரு. ச. றுவுதரன் மற்றும்

தொடர் 08ஆம் பக்கம்...

## பிரதேச சிறுவர் அபிவிருத்தி மற்றும் பால்சார் வன்முறைகளுக்கு எதிரான செயலணிக் கூட்டம்



நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் இவ்வருடத்தின் 4ஆம் காலாண்டுக் குரிய பிரதேச சிறுவர் அபிவிருத்தி மற்றும் பால்சார் வன்முறைகளுக்கு எதிரான செயலணிக் கூட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. டி. ஜாசுகி அவர்களின் ஒருங்கிணைப்பில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் **2024** டிசம்பர் **11**ஆந் திகதி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம், நிருவாக கிராம உத்தியோகத்தர் திரு. மனோஜ் இந்ரஜித் ஆகிய உத்தியோகத்தர்கள் கலந்து

தொடர் 08ஆம் பக்கம்...

## தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கிலான கற்றாளை சவர்க்காரம் தயாரிக்கும் பயிற்சி



நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட

தொடர் 08ஆம் பக்கம்...

## மாகாண விருது வழங்கி கௌரவிப்பு



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த இலக்கிய விருது வழங்கல் நிகழ்வு **2024** டிசம்பர் **15**ஆம் திகதி திருகோணமலை இந்துக் கலாசார மண்டபத்தில் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த ரத்னசேகர

தொடர் 08ஆம் பக்கம்...

# ஆசிரியரிடமிருந்து...


நாவெளி மலர் - 12 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் அளவற்ற மகிழ்ச்சி. இவ்வருடத்தின் இறுதி மலராக பல்வேறு செய்திகள் மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் - 12 இம்மாதமும் உங்களுக்காக வெளி வருகின்றமை மகிழ்வளிக்கின்றது. இத்தகைய மகிழ்வினைத் தந்து கொண்டிருக்கும் "நாவெளி" இன் சொந்தங்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றிகளும், பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

ஒரு நாட்டில் உள்ள அரச திணைக்களங்களில் கடமை ஆற்றுகின்ற அரச அதிகாரிகளின் அணுகுமுறை மிக முக்கியமானது. அரச அதிகாரிகளுக்கும், பொது மக்களுக்கும் இடையிலான ஒரு நேர்மறையான, மரியாதைக்குரிய மற்றும் வினைத்திறன் வாய்ந்த உறவு அரசாங்கத்தின் மீதான பொது மக்களின் நம்பிக்கையை வளர்க்கின்றது.
அத்துடன் நாட்டின் வளர்ச்சியில் குடிமக்களின் பங்கேற்பை ஊக்கு விக்கின்றது. மற்றும் பொதுச் சேவைகள் திறம்பட வழங்கப்படுவதையும் உறுதி செய்கின்றது. சுமூகமான மற்றும் இணக்கமான நிருவாகத்தை உறுதி செய்வதற்காக அரச அலுவலர்கள் தங்கள் கடமைகளை தன்னுணர் வேற்றம், தொழில் வாண்மைத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் சேவை வழங்கலை இலக்காகக் கொண்ட மனநிலையுடன் அணுக வேண்டும். அரசாங்க அதிகாரிகளுக்கும், பொது மக்களுக்கும் இடையிலான எந்தவொரு வெற்றிகரமான தொடர்புக்கும் அடித் தளமானது தன்னுணர்வேற்றமாகும். அரச அதிகாரிகளுக்கு மக்களுக்கு சேவை செய்யும் பொறுப்பானது ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கடமை குடிமக்கள் மீது ஆழ்ந்த மரியாதையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். தன்னுணர்வேற்றம் என்பது, பொதுமக்களின் தேவைகள், கவலைகள் மற்றும் சவால்களைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு இரக்கமான முறையில் பதிலிறுபதை உள்ளடக்குகிறது. அரசாங்க அதிகாரிகள், தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் நலனில் உண்மையான அக்கறை காட்டும் போது அது அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான நல்லெண்ணத்தை வளர்ப்பதுடன், பாரம்பரிய அரச அதிகாரத்துவ நிறுவனங்களுடனான தொடர்புகளின் போது பல குடிமக்களும் அடிக்கடி உணரும் ஒதுக்கலுக்குட்பட்ட உணர்வையும் குறைக்கின்றது.

மேலும் மரியாதை மற்றும் கௌரவம் என்பனவும் முக்கியமான விடயங்களாகும். அரச அலுவலர்கள் அனைத்துக் குடிமக்களையும், அவர்களின் சமூகப் பொருளாதாரப் பின்னணி, கல்வி அல்லது தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் கண்ணியத்துடன் நடாத்த வேண்டும். பொறுமை மற்றும் கண்ணியம் நிரம்பிய ஒரு மரியாதையான அணுகுமுறையானது, பதட்டமான சூழ்நிலைகளைத் தணிக்கவும், தனி நபர்கள் மதிப்பு மிக்கவர்களாக உணரவும் உதவக்கூடியதாக இருக்கும். ஒரு அதிகாரியின் குரலின் தொனி, உடல் மொழி மற்றும் பதிலளிக்கும் தன்மை ஆகியவை அவர்கள் தொடர்பு கொள்ளும் நபர் முக்கியமானவர் மற்றும் கவனத்திற்குத் தகுதியானவர் என்பதை வெளிப்படுத்த வேண்டும். இந்த மரியாதை அரசாங்கத்தைப் பற்றிய பொதுக் கருத்துக்களில் குறிப் பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதுடன் அதிக குடிமை ஈடுபாட்டையும் ஊக்குவிக்கலாம்.

அந்தவகையில் அரச சேவையினைப் பெறுமதி உள்ளதாக மாற்ற வேண்டிய பொறுப்பு எம்மத்தியில் உருவாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

**என்றும் அன்புடன்**
**ஆசிரியர்.**



## வாழ்க்கைத் தத்துவங்கள்

* நல்லவனாய் இரு, ஆனால் அதை நிரூபிக்க முயற்சி செய்யாதே. அதைவிட முட்டாள்த்தனமான விஷயம் எதுவுமில்லை.

* வாழ்க்கையில் யாரையும் சார்ந்து வாழ்ந்து விடாதே, உன் நிழல்கூட வெளிச்சம் உள்ளவரை தான் துணைக்கு வரும்.

* அனைவரையும் நேசி, சிலரை மட்டும் நம்பு, ஒருவரை பின்பற்று, ஆனால் ஒவ்வொருவரிடம் இருந்தும் கற்றுக்கொள்.

* வீரனைப் போரிலும், யோக்கியனை கடனிலும், மனைவியை வறுமையிலும், நண்பனை கஷ்ட காலத்திலும் அறிந்து கொள்ளலாம்.

* பழைமையைப் பற்றி ஒன்றுமே தெரியாமல், புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.

* பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட்கும் போதுதான் தெரியும்.

* சிக்கனமாக வாழும் ஏழை சீக்கிரமாக செல்வந்தனாவான்.

* கீழே விழாமல் இருப்பது பெருமையில்லை, விழுந்த பொழு தெல்லாம் எழுந்திருப்பதே பெருமை.

* மனநிறைவு என்பது இயற்கையாக நம்மிடம் உள்ள செல்வம், ஆடம்பரம் என்பது நாம் தேடிக்கொள்ளும் வறுமை.

* உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் இருக்கும், உன் செயல்களுக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை இருக்கும்.

# நாவிதன்வெளி பிரதேச மக்களும் குடிநீர் இணைப்பும்

திட்டமிடல் பிரிவு - பிரதேச செயலகம், நாவிதன்வெளி.

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவானது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். இங்கு 300 பயனாளிகள் குடிநீர் இணைப்பு இன்றி மிகுந்த சிரமத்தில் வாழ்கின்றனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் மற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர். திருமதி. திலகராணி கிருபைராஜா ஆகியோரின் முயற்சியின் கீழ் லைக்கா ஞானம் அறக்கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் அவர்களின் நிதிப் பங்களிப்புடன் (LYCA GNANAM FOUNDATION) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான குடிநீர் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கள ஆய்வு இடம் பெற்று கட்டங் கட்டமாக பயனாளிகளுக்கு குடிநீர் வழங்கும் நிகழ்வு இடம் பெற்று வருகின்றது.


இதன் மூலம் 179 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அதில் முதலாம் கட்டமாக 52 பயனாளிகளுக்கு 1,732,714.00 நிதியும், 2ஆம் கட்டமாக 77 பயனாளிகளுக்கு 2,577,319.00 நிதியும் செலவு செய்யப்பட்டு நீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 3ஆம் கட்டமாக 50 பயனாளிகளுக்கு 1,718,961.00 மதிப் பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு லைக்கா ஞானம் அறக்கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் அவர் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நாவிதன்வெளி பிரதேச மக்களின் 85 சதவீதமான பயனாளிகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு அவர்களின் அடிப்படைத்தேவை பூர்த்தி செய்யப் பட்டுள்ளதுடன் இதற்கு நிதி உதவி வழங்கிய லைக்கா ஞானம் அறக் கட்டளை நிறுவன முகாமையாளர் கௌரவ. தவிசாளர் அல்லிராஜா சுபாஸ்கரன் அவர்களுக்கு எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந் நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தியின் ஒரு மைல் கல்லாகும் என்பதனை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.









# அமெரிக்க - சீன உச்ச பதற்றம் ட்ரம்ப்பின் அறிவிப்பு

P.RUPAN - DEVELOPMENT OFFICER



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் தனது பதவியேற்பு விழாவில் பங்கேற்க சீன ஜனாதிபதி ஷீஜின்பிங்கை அழைத்துள்ளார். இது குறித்து வாஷிங்டனில் உள்ள சீனத் தூதரகம் கருத்து தெரிவிக்காததால், ஜின்பிங் இதை ஏற்றுக்கொண்டாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இரண்டு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம், தாய்வான் விவகாரம் மற்றும் தென் சீனக் கடல் எல்லை விவகாரம் போன்ற பிரச்சினைகளில் தொடர்ந்து பதட்டம் நிலவி வருகின்றது. இந்நிலையில் ஜி ஜின்பிங்கை ட்ரம்ப் அழைத்துள்ளமையானது உலக அளவில் கவனம் பெற்றுள்ளது.

அமெரிக்காவில் சமீபத்தில் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் (US Presidential Election 2024) குடியரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். இந்நிலையில் அடுத்த ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி வாஷிங்டனில் ட்ரம்ப் பதவியேற்க உள்ளார். அவரது ஆட்சியில் அரசாங்கத்தின் நிருவாகப் பொறுப்பைக் கவனிக்க உள்ளவர்கள் குறித்த அறிவிப்பை அவர் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.மேலும் துணை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜே.டி. வான்ஸுடன் இணைந்து இந்த விழாவிற்கு தயாராகி வருகிறார்.

# தென்கொரிய ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை நிறைவேற்றம்

தென்கொரிய ஜனாதிபதி யுன் சுக் யோலுக்கு (Yoon Suk Yeol) எதிராக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த இரண்டாவது குற்றப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதாக வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பான வாக்கெடுப்பு கடந்த டிசம்பர் 14ஆம் திகதி காலை இடம்பெற்றுள்ளது. கடந்த டிசம்பர் 3ஆம் திகதி இரவு திடீரென இராணுவச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் அடிப்படையில் தென்கொரிய எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி யுன் சுக் யோலுக்கு எதிராக ஒரு குற்றப் பிரேரணையை கொண்டு வந்தன.

எனினும், ஜனாதிபதியை பிரதிநிதித் துவப்படுத்தும் ஆளும் மக்கள் சக்தி கட்சியினர் வாக்கெடுப்பை புறக்கணித்து, நாடாளுமன்றத்தை விட்டு வெளிநடப்பு செய்ததன் காரணமாக முதலாவது குற்றப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. இரண்டாவது முறையாக ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்தன. அங்கு தென்கொரிய நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து உறுப்பினர்களும் தமது வாக்குகளை பயன்படுத்தியதோடு 204 உறுப்பினர் கள் பதவி நீக்கத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

பதவி நீக்கத்திற்கு எதிராக 85 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. அதன்படி, தென்கொரிய அதிபர் யுன் சுக் யோலுக்கு எதிரான பதவி நீக்கம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி,



தற்போதைய ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கப்படுவதால், பிரதமர் பதில் ஜனாதிபதியாக செயற்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸில் முக்கிய அமைச்சரவை மாற்றம்: பிரதமரானார் பெய்ரூங்

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அந்நாட்டின் பிரதமராக பிராங்கோயிஸ் பெய்ரூவை நியமித்து உள்ளார். அவரது அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு தீவிர வலதுசாரி மற்றும் இடதுசாரி சட்டம் இயற்றுபவர்கள் வாக்களித்ததை அடுத்து, கடந்த வாரம் பதவி விலகிய மைக்கேல் பார்னியருக்குப் பதிலாக புதிய அரசாங்கத்தை வழிநாடத்த இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பெய்ரூங் பிரதமராக நியமிக்கப் பட்டமையானது அவருக்கு அரசாங்கத்தை அமைக்கும் பணியை மக்ரோன் அளித்துள்ளார் என்று அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது. முன்னாள் பிரதமரான பார்னியரின் அரசாங்கத்தின் கவிழ்ப்பு ஆறு மாதங்களில் பிரான்சை அதன் இரண்டாவது பெரிய அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. 73 வயதான பெய்ரூ மக்ரோனுடன் நெருக்கமான அரசியல் உறவை பேணுகிறார். இந்நிலையில், எதிர்வரும் நாட்களில் தனது அமைச்சர்களின் பட்டியலை முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சமாந்தர கோடுகள்

## சிறுகதை




க.ஹெர்சினிகா, வீரமுனை

தன் நண்பனுடன் என்றும் பிரியாது இருந்த மாலன், கடந்த காலத்தில் இடம்பெற்ற சில கசப்பான சம்பவங்கள் காரணமாக தன் நண்பனுடன் கதை பேச்சுக்கள் அற்று இருந்தான். இருந்தும் மாலன் மனதில் பல ஆசைகள் குடி கொண்டிருந்தன. தன் நண்பன் எப்பொழுதாவது என்னிடம் வந்து பேசிவிடுவான், நாங்கள் மீண்டும் ஒன்றாக சேர்வோம் என்ற நம்பிக்கையோடு இருந்தான்.

சில வருடங்களுக்கு முன்பு கடிதப் போக்குவரத்துள்ள காலத்தில் மாலன், சுதன், அமலன் ஆகிய மூவரும் இணைபிரியாத நண்பரகளாக இருந்தனர். ஆனால் கெட்ட குணம் கொண்ட அமலனுக்கோ மாலனையும் சுதனையும் எப்படியாவது பிரித்து சுதனை தன்னுடன் சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இதற்காக பல கபட முயற்சிகளை அமலன் மேற் கொண்டான். ஆனால் அதில் எதுவும் வெற்றி பெறவில்லை. மாலனுக்கும் சுதனுக்குமிடையில் முரண்பாடுகள் நிகழும். ஆனால் அது ஓரிரு நாட்களில் சரியாகி விடும்.

மாலன் மிகவும் கெட்டிக்காரனாக காணப்பட்டான். வழமையாக முதலாமிடம் வரும் மாலன் இறுதியாக நடந்த பரீட்சையில் துரதிஸ்டவசமாக நான்காமிடம் வந்துவிட்டான். சுதன் மாலனிடம் சென்று “யானைக்கும் அடி சறுக்கும் என்று நம்மட மூதாதையர் சும்மாவா சொன்னாங்க, சறுக் கிடிச்சில பாத்தையா?” என்று மாலனை கேலி செய்து சிரித்தான். இதனால் கோபம் கொண்ட மாலன் சுதனிடம் சண்டை செய்ய ஆரம்பித்தான். வாய்ப்பேச்சு கைகலப்பாக மாற இந்நிகழ்வில் இருந்து இவர்கள் இருவரும் கதைக்காது முகம் பார்க்காது விட்டனர். இதனைப் பார்த்த அமலனுக்கு ஒப்பற்ற மகிழ்ச்சி. ஆனாலும் அவன் சும்மா இருக்கவில்லை. மாலனிடம் சுதனைப் பற்றியும் சுதனிடம் மாலனைப் பற்றியம் மூட்டிவிட்டுக் கொண்டே இருந்தான்.

அன்று கா.பொ.த. சாதாரணதர இறுதிநாள். அனைத்து நண்பர் களும் தங்களுக்குள் உறவாடி மகிழ்ந்துகொண்டிருந்தனர். மாலன் சுதனிடம் பேசச் சென்றான், ஆனால் சுதனோ தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்று விட்டான். அதன்பின் இருவரும் சந்திக்கவேயில்லை. மாலன் திருமண வயதை அடைந்தான். திருமணம் முடிவாகியது. தன் திருமண அழைப்பிதழை சுதனுக்கு அனுப்பினான். ஆனால் அவன் வரவில்லை. மாலனுக்கு குழந்தை பிறந்தது. பிறந்தநாள் அழைப்பிதழை சுதனுக்கு அனுப்பினான். ஆனாலும் அவன் வரவில்லை. மாலன் முதுமையில் நோயில் படுத்த படுக்கையில் கிடந்தான். அப்போது அவனைப் பார்க்க ஒருவன் வந்தான். வந்தது சுதன் அல்ல, சுதனது மகன். அப்பொழுதுதான் தெரிந்தது சுதன் இறந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டது என்றும் வந்த மகன் மாலனைப் பார்த்து



“ எனது தந்தை உங்களைப் பற்றியே பேசுவார், உங்கள் பாடசாலைக் காலங்களையே எங்களுக்கு கதையாகக் கூறுவார். அவர் இறப்பிலும் கூட உங்களைத்தான் அவர் கேட்டார்.”

இதனைக் கேட்டதும் ஒரு சிறிய மனச் சஞ்சலத்திற்காக தன் நண்பனிடம் வறட்டு கௌரவம் பார்க்காது பேசியிருக்கலாமே மகிழ்வாக இருந்திருக்கலாமே என எண்ணி தன் மனதுக்குள்ளே முழுங்கி அழுதான். அவ்வேளை மாலன் உயிர் பிரிந்தது. வானுலகத் திலாவது தன் நண்பனிடம் மன்னிப்புக் கேட்கச் சென்று விட்டான் மாலன்.

முற்றும்.

# இலங்கை நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறான வழிகளில் முன்னேற்றலாம்

அ.க.மு. வஜித் - பிரதேச செயலகம் நாவிதன்வெளி

இலங்கை நாட்டினை முன்னேற்ற பல்வேறு வழிகள் உள்ளன. இந்த வழிகளை அரசாங்கம், தனியார் மற்றும் பிறசமூக அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தலாம். இலங்கையின் பொருளாதாரத்தை அதிகரிக்க கீழ்க்காணும் முக்கியமான வழிமுறைகள் காணப்படுகின்றன.

## 1. விவசாயத்தை ஊக்குவித்தல்

* இலங்கையின் பொருளாதாரத்திற்கேற்ப பல பகுதிகளில் விவசாயம் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் பல்வேறு சவால்களுக்கு எதிராக இது முன்னேறவில்லை.

* முன்னேற்றப்பட்ட தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல், விவசாய முறைகளை மேம்படுத்த புதிய தொழில்நுட்பங்களை வழங்குதல்.

* சேமிப்பு வசதிகள் மற்றும் பிற சேமிப்பு முறைகளை வலுப்படுத்த வேண்டும்.

* கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகளுக்கு கற்கைமுறை மற்றும் நிதி ஆதரவுகளை கட்டாயம் வழங்க வேண்டும்.

* வினைத்திறனான விளைச்சலை பெறக்கூடிய நுட்பமுறைகளை கருத்தரங்குகள் (Seminar) மூலம் மக்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

## 2. தொழில் துறை மேம்பாடு

* தொழில் துறைகள் மற்றும் புதிய தொழில்கள் உருவாக்கப்பட்டால் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்.

* சிறு கைத்தொழில்கள் செய்பவர்களுக்கு ஊக்குவிப்புகளை வழங்கி அவர்களின் வருமானங்களை அதன் மூலம் உயர்த்தலாம்.

* Technology உடன் தொடர்புடைய தொழில்களை நீடித்தல்.

## 3. துறைசார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி

* இலங்கையின் ஏற்றுமதியை அதிகரிக்க ஏற்றுமதிப் பொருட்களை மேம்படுத்துவது அவசியம்.

* விமானசேவைகள், சுற்றுலா, கைத்தொழில், தொழில்நுட்ப சேவைகள் இவற்றில் மூன்று துறைகளில் வளர்ச்சிக்கு வாய்ப்பு உள்ளது.

## 4. சுற்றுலா துறையின் மேம்பாடு

* இலங்கையின் இயற்கை அழகு மற்றும் கலாசாரத்தை கொண்டு சுற்றுலாத் துறையை முன்னேற்றம் செய்ய முடியும்.

* சுற்றுலா முன்னேற்றத்திற்கேற்ப போக்குவரத்து, கண்காணிப்பு, சுற்றுலா பாதுகாப்பு போன்றவற்றிக்கு முக்கியம் தர வேண்டும்.

* சுற்றுலா முன்னேற்றத்திற்கு ஏற்ப விளம்பர வேலைகள் செயற்படுத்த வேண்டும்.

## 5. கல்வி மற்றும் திறமைத்தேவை

* தொழில் துறையில் திறமையான பணியாளர்களின் தேவையுள்ளதனால் கல்வியில் மாற்றம் கொண்டுவர வேண்டும்.

* தொழில் துறைகளுக்கு ஏற்ப தொழில் ஆட்சேர்ப்பில், தொழிற் பயிற்சிகளில் (Skill Development) மக்களை ஈர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## 6. வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்

* வெளிநாட்டு முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டுவர நல்ல முதலீட்டுச் சூழலை உருவாக்க வேண்டும்.

* தனியார் மற்றும் பொதுத்துறை பாதுகாப்புத்திட்டங்களை வழங்கி முதலீட்டுக்கு வழி வகுக்க வேண்டும்.

## 7. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுறுசுறுப்பான வளர்ச்சி

* சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்தலாம்.


* பருவமாற்றத்தினால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொன்டு நீடித்த பொருளாதார வளர்ச்சியை உறுதிப் படுத்த வேண்டும்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் வணிகத்துறை, தொழில் நுட்பம், சுற்றுலா, விவசாயம், கல்வி, முதலீடு மற்றும் சமூக முயற்சி போன்ற பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்த வேண்டும். அரசாங்கம் மற்றும் தனியார்துறை ஒத்துழைப்புடன் இந்த வழிமுறைகள் நடைமுறைப் படுத்தப் பட்டால் இலங்கையின் பொருளாதார நிலைமை வலுவடையும்.

வீண் அரச செலவுகளை தவிர்த்து உற்பத்தியை, உற்பத்தி வளங்கள் வெளிநாட்டுச் செலாவணி வருமானங்கள் மற்றும் ஏற்றுமதி வருமானங்களை அதிகப்படுத்துவதன் காரணமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றமடையச் செய்யலாம்.

# மனிதர்களை சுத்தம் செய்யும் *AI* வாஷிங் மெஷின்

ICT UNIT - DIVISIONAL SECRETARIAT, NAVITHANVELI






இன்றைய காலகட்டத்தில் துணி துவைக்கும் **Washing Machine** ஐ பார்த்திருக்கிறோம். இருந்தாலும், மனிதர்களை துவைத்து உலர்த்தும் இயந்திரத்தை பற்றி கேள்விப்பட்டிருக்கீறீர்களா? எதிர் காலத்தில் மனிதர்களை துவைத்து உலர்த்தும் மனித சலவை இயந்திரங்கள் (**Human Washing Machines**) வரவிருக்கின்றன. நாள் முழுவதும் பலவிதமான வேலைகள் செய்து மிகவும் சோர்வாக இருப்பவர்கள், குளிக்க சோம்பேறித்தனம் பட்டால், பதினைந்து நிமிடங்கள் இந்த இயந்திரத்தில் உட்கார்ந்தால் போதும். நம்மைக் குளிக்க வைத்து காயவைத்து வெளியே அனுப்பும். இந்த இயந்திரத்தை தொழில்நுட்பத் துறையில் உலகின் மிகவும் முன்னேறிய நாடாகக் கருதப்படும் ஜப்பான் உருவாக்கியுள்ளது. அதாவது ஒரு நபரின் உடலை 15 முதல் 20 நிமிடங்களுக்குள் சுத்தம் செய்து கொடுக்கும் மனித சலவை இயந்திரம் ஜப்பானில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய பொறியியலாளர்கள் இந்தப் புதிய மனித சலவை இயந்திரத்தினை உருவாக்கியுள்ளனர். இந்த இயந்திரத்திற்கு மிராய் நீங்கன் சென்டகுகி (**Mirai Ningen Sentakuki**) என்று பெயரிட்டுள்ளனர். இந்த **AI** இயந்திரம் ஆனது பதினைந்து நிமிடங்களில் மனிதர்களைக் குளிப்பாட்டி உலர்த்தும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த இயந்திரத்தை ஒசாகாவைச் சேர்ந்த ஷவர்ஹெட் நிறுவனமான **Science Co.** உருவாக்கியுள்ளது. இந்த இயந்திரம் ஒரு நபரை வெறும் பதினைந்து நிமிடங்களில் முழுமையாக சுத்தம் செய்யும் திறன் கொண்டது என்று நிறுவனம் கூறுகிறது. **AI** ஹியூமன் வாஷிங் மெஷின் எவ்வாறு வேலை செய்கிறது?

இந்த இயந்திரம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம். முதலில் ஒரு நபர் இயந்திரத்தில் உள்ள **Plastic Pad** இல் உட்கார வேண்டும், அதன் பிறகு இந்த **Tub** ஆனது பாதி வெந்நீரால் நிரப்பப்படும். இதற்குப் பிறகு, நீரின் ஜெட்களிலிருந்து சிறிய காற்றுக் குமிழிகள் உருவாகத் தொடங்கும். அதன் பிறகு, இந்த குமிழிகள் தோலில் இருக்கும் அழுக்குகளை சுத்தம் செய்யும். அதே நேரத்தில், இந்த இயந்திரத்தில் உள்ள **AI** ஆனது நபரின் உடல் மற்றும் தோல் வகையின் அடிப்படையில் **Wash** மற்றும் **Dry** விருப்பங்களை தீர்மானிக்கிறது. இந்த இயந்திரம் ஆனது மனித தோலில் உள்ள அழுக்குகளை அகற்றுவது மட்டுமின்றி மக்களின் மனதையும் சாந்தப்படுத்தும் என பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தத் தொழில்நுட்பம் அதிநவீனமாகத் தோன்றலாம். ஆனால் இது பழமையானது. இந்த இயந்திரம் ஆனது 1970ஆம் ஆண்டு ஜப்பான் உலக கண்காட்சியில் காட்டப்பட்டது. அந்த நேரத்தில் **SAANYO** எலக்ட்ரிக் நிறுவனம் (இப்போது **PANASONIC**) நீள்வட்ட வடிவ "அல்ட்ராசோனிக் குளியல்" (**Ultrasonic Wash**) ஒன்றை அறிமுகப்படுத்தியது. இந்த இயந்திரத்தில் ஒருவர் உட்காரும் போது தானாகவே வெந்நீர் நிரப்பப் பட்டது. இதில், அல்ட்ராசோனிக் அலைகள் மற்றும் மசாஜ் பந்துகள் உடலை சுத்தம் செய்யும், பின்னர் நீர் தானாகவே வெளியேறும், ஆனால் அந்த நேரத்தில் அல்ட்ராசோனிக் குளியல் பிரபலமடையவில்லை. ஆனால் தற்போது இந்த புதிய இயந்திரத்தை ஜப்பானைச் சேர்ந்த 'சயின்ஸ் கோ' (**Science Co.**) நிறுவனத்தின் பொறியியலாளர்கள் தயாரித்து உள்ளனர். மிராய் நீங்கன் சென்டகுகி (**Mirai Ningen Sentakuki**) ஆனது அடுத்த ஆண்டு ஏப்ரலில் ஒசாகாவில் நடக்கும் எக்ஸ்போ 2025இல் காட்சிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒசாகா கன்சாய் எக்ஸ்போவில் 1,000 பேருக்கு சோதனை பயன்பாட்டிற்கான ஏற்பாடுகளை செய்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கண்காட்சிக்குப் பிறகு, சந்தை விற்பனைக்கு இந்த இயந்திரம் தயாரிக்கப்படும் என்று 'சயின்ஸ் கோ' நிறுவனத்தின் தலைவர் அயோமா தெரிவித்தார்.

## பாடசாலை மாணவர்களுக்கான...

நாவிதன்வெளி பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் திரு.அ.சுதர்சன், மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஐ. எல். எம். அன்பாஸ் போன்றோர் கலந்து கொண்டனர். மேலும், இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களும் ஏனைய உத்தியோகத் தர்களும் கலந்து கொண்டனர்.





## பிரதேச செயலக சிறுவர்...

கொண்டதுடன் மேலும் இக்கூட்டத்தில் சிறுவர், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் சிறுவர், பெண்கள் அபிவிருத்திக்கான எதிர்கால திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் நாவிதன்வெளி சுகாரதார வைத்திய பணிமனையின் வைத்தியர் திரு. எம். எம். பாயிஸ் மற்றும் சுகாதார வைத்திய அலுவலக உத்தியோகத்தர்கள், கல்முனை ஆதார வைத்தியசாலை நட்பு நிலையதாதி உத்தியோகத்தர்கள், பொலிஸ் நிலைய உத்தியோத்தர்கள் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கிராம சேவகர் பிரிவுகளுக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள், சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள், திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்கள், கலாசார பிரிவு உத்தியோகத்தர்கள்,வெளி நாட்டு வேலைவாய்ப்பு பிரிவு உத்தியோகத்தர்கள், SWOAD நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## தொழில் முயற்சியாளர்களை...

தொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களது தொழில் வாய்ப்பினை ஊக்கப்படுத்தும் நோக்கிலான கற்றாளைச் சவர்க்காரம் தயாரிக்கும் தொழில்நுட்பப் பயிற்சி பட்டறையானது 2024 டிசம்பர் 03ஆந் திகதியன்று நாவிதன்வெளி விதாதா வள நிலையத்தில் இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலக விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. எஸ். தர்சன் அவர்கள் வளவாளராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கான தெளிவூட்டல்களை வழங்கினார்.

நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி. எஸ். கலாயினி மற்றும் திருமதி. பி. அஞ்ஞனா ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இந் நிகழ்வு இடம்பெற்றதுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## மாகாண விருது வழங்கி...

பிரதம அதிதியாக கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தார்.

இதன்போது நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நாவிதன்வெளி கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் ஏ.எஸ்.எம். ஷினாஸ் ஊடகத் துறைக்கான இளங்கலைஞர் விருதைப் பெற்றுக்கொண்டதுடன், உளவளத்துணை உத்தியோகத்தர் எஸ். சுதர்சன் சிறந்த ஆய்வுத்துறை இலக்கியத்திற்கான சாஹித்திய விருதினையும் பெற்றுக் கொண்டனர்.

# பொலித்தீன் பாவனையைக் குறைத்து மாற்றீடாக துணிப் பைகளை சந்தைப்படுத்தல்



மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவின் ஒருங்கிணைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2024 டிசம்பர் 09ஆந் திகதியன்று நடைபெற்றது. இதன்போது மாற்றுத்திறனாளிகளை உள்வாங்கி அனர்த்த ஆபத்து குறைப்பு செயற்பாடுகளை மேம் படுத்தல் ஊடாக சூழல் தொகுதிகளை பாதுகாப்பதும் மற்றும் வாழ் வாதாரத்தைப் பேணுதலும் எனும் செயற்திட்டத்தின்கீழ் பொலித்தீன் பாவனையைக் குறைத்து மாற்றீடாக துணிப்பைகளை சந்தைப்படுத்தல் மற்றும் சுயதொழிலை வெற்றிகரமாக கொண்டு செல்வது பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. இக்கருத்தரங்கிற்கு வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ஜூட் பரனிதரன், திட்ட உத்தியோகத்தர் திரு. M. அன்பழகன் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் சமூக சேவை பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விதாதா வள உத்தியோகத்தர்கள், கிராம சேவகர் பிரிவுகளுக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள், சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள், திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்கள், வெளி நாட்டு வேலைவாய்ப்பு பிரிவு உத்தியோகத்தர்கள், சமுர்த்திப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.11 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 உ | ழை | 2 ப் | பு | ■ | 3 பு | ல | 4 மை |
| ண் | ■ | அ | ■ | ■ | த் | ■ | தா |
| 5 டி | 6 ண் | க | ■ | ■ | 7 க | 8 ம் | ன |
| ■ | 9 ச | பை | ■ | 10 மா | த | வ | ம் |
| 11 கூ | டை | ■ | 12 க | ரு | ம் | பு | ■ |
| ரை | ■ | 13 அ | ந் | தி | ■ | ■ | 14 வ |
| ■ | 15 கா | ணி | த | ■ | ■ | 16 பா | லை |
| 17 பா | சி | ■ | 18 ல் | அ | ல | ல் | ■ |

### வெற்றியாளர்

**D.ஜாசுகி**

பாண்டிருப்பு

## குறுக்கெழுத்துப் போட்டி இல – 12

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | ■ | 3 |
| | ■ | ■ | | ■ | 4 | | |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| ■ | 5 | | | | | ■ | ■ |
| 6 | | ■ | ■ | ■ | 7 | 8 | 9 |
| 10 | | | | 11 | ■ | 12 | |
| ■ | | ■ | ■ | | ■ | | ■ |
| 13 | | | ■ | 14 | | | |

### இடமிருந்து வலம்

01. சேர, சோழ, பாண்டிய மன்னர்களை இப்படிக் கூறுவர்.
04. மாலைப்பொழுதைக் குறிக்கும்.
05. உணவில் ஏற்படுத்தும் கட்டுப்பாடு.
06. புருவத்தை இதற்கு ஒப்பிடுவர் கவிஞர்.
07. நற்பணிகளால் கிடைப்பது.
10. சிவாஜி, சரோஜாதேவி இணைந்து நடித்த பழைய படம் ஒன்று.
12. ஒரு தீவும், அங்கு பேசப்படும் மொழியும். (திரும்பி உள்ளது)
13. பாம்பை ஆட்டிப்படைக்க பயன்படுவது.
14. சமையல் செய்ய அவசியமானது. (குழம்பி)

### மேலிருந்து கீழ்

01. வயது முதிர்தலைக் குறிக்கும்.
02. கணவன், மனைவியை இப்படிக் கூறுவர்.
03. சுவர் - இதனைக் குறிக்கும்.
04. இளந்தளிரை இப்படியும் கூறுவர்.
05. உயந்தோரை முன்னர் இதில் வைத்து அமர்ந்தி செல்வார்களாம்.
06. உயிர். (தலைகீழ்)
08. மகிழ்ச்சியை இப்படியும் கூறுவர்.
09. நீறில்லா நெற்றியை இப்படிக் கூறுகிறார் ஔவையார். (தலைகீழ்)
11. முதுகில் மூன்று கோடுகள் உள்ள உயிரினம். (குழம்பி)

இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.01.15 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.

**RELOAD**

முதலாம் பரிசு : 200/=
இரண்டாம் பரிசு : 150/=
மூன்றாம் பரிசு : 100/=

# ஒழுக்கம் உயர்வு தரும்

இ. கபிஷ்கா
உதிராப்பூக்கள் சிறுவர் கழகம், காரைதீவு - 01

நம் முன்னோர்கள் வாழ்வில் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளனர். கல்வி, செல்வம், பதவி போன்றவை எதுவுமே ஒழுக்கத்திற்கு ஈடாக முடியாது. ஒழுக்கமென்பது சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்பண்பாகும்.

வெள்ளைக் காகிதத்தில் சிறு கரும்புள்ளி அதேபோல் இருந்தால் கரும்புள்ளி மட்டுமே கண்ணில் படும். அதேபோல் எத்தனை எத்தனை பெருமைகள், திறமைகள் இருந்தாலும் ஒழுக்கம் இல்லையென்றால் வாழ்வில் எவரும் மதிக்கப்படுவதில்லை. வாழ்வில் உயர்வு பெற வேண்டுமென்றால் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்தல் வேண்டும்.

இதனையே வள்ளுவர் ஒழுக்கம் மேன்மையைத் தருவதால் அந்த ஒழுக்கமே உயிரிலும் கருதப்படும் என்கின்றார். வாழ்வில் உயர்ந்த நிலைமையை அடைந்தாலும் ஒழுக்கம் இல்லையெனின் அந்த உயர்ந்த நிலைக்கு அர்த்தம் இருக்காது.

வருந்தியேனும் ஒழுக்கத்தை போற்றிக்காக்க வேண்டும். தனி மனித ஒழுக்கம் சமுதாய ஒழுக்கமாகும். சமுதாய ஒழுக்கம் நாட்டின் ஒழுக்கமாகும். எனவே வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தால்தான் தலைசிறந்து வாழ வழிவகுக்கும். சிறு வயதிலிருந்தே ஒழுக்கத்தைக் கற்றுக் கொண்டு வாழ்வில் உயர்வு பெறுவோம்.

“அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர்”

# மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

ச.கஜேந்தினி
றோயல் சிறுவர் கழகம், சொறிக்கல்முனை-03





மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஒரு தமிழ் கவிஞர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் பெண் விடுதலைக்காக போராடியவர் ஆவார்.

பாரதியார் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் 1882ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆந் திகதி பிறந்தார். இவரது தந்தை பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் பெயர் இலக்குமி அம்மாள் ஆவார்.

இவருக்கு 11ஆவது வயது இருக்கும்போதே இவரது கவி பாடும் ஆற்றலையும் புலமையையும் பாராட்டி எட்டயபுர மன்னன் ‘பாரதி’’ என்ற பட்டத்தை வழங்கினார்.

சுதந்திரப் போரில் பாரதியின் பாடல்கள் சுதந்திரக் கனலாய் மக்களை வீறு கொள்ளச் செய்தது.

சாதிகள் இல்லையடி பாப்பா என்று கூறிய பாரதியார் தீண்டாமையை அறவே வெறுத்தார்.

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திசூடி போன்றவை மகாகவி பாரதியாரால் எழுதப்பட்டவை ஆகும்.

பாரதியார் தேசியக் கவிஞர், மகாகவி, மானுடம் பாடவந்த மகாகவி, தமிழ்க்கவி, அமரகவி, முன்னறி புலவன், முண்டாசுக்கவி, நித்திய தீரர், காளிதாசன், உள்ளிட்ட பல பெயர்களால் போற்றப்படுகிறார்.

பகவத்கீதையை தமிழில் மொழி பெயர்த்த பெருமை இவரையே சாரும். பல மொழிகளில் கைதேர்ந்தவராக பாரதி இருந்த போதிலும் யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று தமிழின் சிறப்பை எடுத்துரைத்தவர்.

தமிழுக்கு தொண்டாற்றிய பல போராட்ட வீரர்களில் பாரதி தனக்கென ஒரு தனியிடத்தை பிடித்துள்ளார் என்றே கூறலாம். இவர் சுதந்திரப் போராட்ட வீரர், கவிஞர் மற்றும் பெண் விடுதலைக்காக போராடியவர் என்று இவரின் பணிகள் தமிழ்நாட்டில் எண்ணிலடங்காதது.

தேசியக் கவிஞர் பாரதியார் 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆந் திகதி தனது 39ஆவது வயதில் இவ் உலகத்தை விட்டு நீங்கிச் சென்றார்.

மகாகவி மறைந்தாலும் அவரது கவிதைகள் இன்னும் பலருக்கு ஊன்று சக்தியாக இருந்து கொண்டே இருக்கின்றது.



# விழுமியக் கல்வியும் வாசிப்பும்

ழ . ஜாசுகி, பிரதேச செயலகம், நாவிதன்வெளி.

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

## 9. சர்வதேச தினங்களைக் கொண்டாடுதல்:

பாடசாலைகளில் சுதந்திர தினம், மனித உரிமைகள் தினம், உலக சுகாதார தினம், அன்னையர் தினம், முதியோர் தினம், சுற்றாடல் தினம், வலது குறைந்தோர் தினம் போன்ற வற்றைக் கொண்டாடுதல். நிகழ்ச்சி களை ஏற்பாடு செய்தல். அவை தொடர்பான விடயங்களை பத்திரிகை களிலும் நூல்களிலும் வாசித்தறிய மாணவர்களை ஊக்குவித்தல்.

## 10. ஊடகப்பாவனை:



விழுமியங்கள் தொடர்பான தெளிவை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் முகமாக கல்வித் தொலைக்காட்சி, திரைப்படம், பத்திரிகை மற்றும் சமூக ஊடகங்களை பயன்படுத்த முடியும்.

## 11. இணைபாடவிதான செயற்பாடுகள்:





விவாதங்கள், பட்டிமன்றங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல். அறம், விழுமியம் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தும் நாடகங்களை மேடையேற்றுதல். புராண, இதிகாச கதைகளை வாசித்து அதன் பாத்திரங்களை நடிக்கச் செய்து மேடையேற்றுதல். மாணவர்கள் சுயமாக ஆக்கங்களை உருவாக்க ஊக்குவித்தல்.

மேற்குறித்த நடைமுறைகள் மூலம் பாடசாலையில் மாணவர் மத்தியில் விழுமிய விருத்தியையும் வாசிப்பை யும் ஊக்குவிக்கக் கூடியதாக இருக்கும். பாடசாலைகளில் பாட நூல்களே வாசிப்பு நூல்களாக உள்ளன. பரீட்சையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகை யிலே பாடநூல்கள் மனப்பாடம் செய்யப்படுகின்றன. வகுப்பறைகளில் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பெற்றோர்களும் பாடநூல்களைத் தவிர ஏனைய புத்தகங்களை வாசிப்பதற்கு அனுமதிப்பதில்லை. ஓய்வு நேரங்களில் கூட சமூக ஊடகங்களில் செலவளிக்கின்றனர்.

இன்றைய சூழலில் பல நூல்கள் குறைந்த செலவில் புகைப்படப் பிரதி எடுக்கப்படுகின்றன. இது ஒரு நூலுக்கு இணையாகாது. வாசிக்கும் ஆத்ம திருப்தியும் ஏற்படாது. ஒரு பயனுள்ள நூலுக்குச் செய்யும் முதலீடு செலவாகாது. அது விளைதிறன் முதலீடாக கருதப்படும். இதனை பொருளியல் பெறுமதி எனக் [Economic Value] கொள்ள முடியும். எனவே வாசிப்பே ஒரு மனிதனை முழுமையாக்குகின்றது என்பதை நாம் மறத்தலாகாது. தரமான கல்விக்கு வாசிப்பு இன்றியமையாததாகும். தரமான வாசிப்புக்கு தரமான நூல்களை குறிப்பான விழுமியக் கருத்துக்களை உள்ளடக்கிய நூல்களை மாணவர்கள் தேடி வாசிப்பது அவர்களது எதிர்காலத்திற்கும், அவர்கள் வாழும் ஆரோக்கியமான சமூகத்திற்கும் அடித்தளமாக அமையும்.

# 4.2 அரசாங்க காணி மதிப்பிடல் மற்றும் காணி வரி அறவிடல்

NMM A. Sujan - Colonization Officer





தகவல் மூலம் - டிரான்ஸ்பரேன்ஸி இன்டர்நெசனல் - ஸ்ரீலங்கா

**கடந்த மாத இதழின் தொடர்ச்சி...**

ஒரு நபருக்கு அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசாங்கத் தின் காணிப் பகுதிகளை வழங்குவதில் அதன்பொருட்டான வருடாந்த வரி அறவிடல் இடம்பெறும். காணி வழங்கப்படும் பிரதான சந்தர்ப்பத்தில் பிரதேச செயலாளர் ஊடாக அந்த காணி தொடர்பில் உத்தேச மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டு, அதன் பெறுமதியின் 4% வருடாந்த காணி வரியாக அறவிடப்படும்.

எவ்வாறாயினும், காணியை குத்தகைக்கு வழங்குவது கௌரவ காணி அமைச்சரின் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர், இந்த காணியை முறையாக மதிப்பீடு செய்தல் வேண்டும். இதன் பொருட்டு பிரதேச செயலாளரினால் மதிப்பீடு நடத்தப்பட வேண்டிய வருடம் மற்றும் காணியின் உறுதியான பெறுமதி மற்றும் வரைபட பிரதி என்பன மாகாண மதிப்பீட்டாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் பிரதான மதிப்பீட்டு அதிகாரிகள் குறித்த காணிக்கு வருகை தந்து மதிப்பீட்டின் போது ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயங்களை கவனத்தில் கொண்டு காணியின் பெறுமதியை பிரதேச செயலாளருக்கு குறிப்பிட்டு அனுப்பி வைப்பர். அதன் பின்னர் கௌரவ அமைச்சரினால் அனுமதியளிக்கப்பட்டவாறு வரித் தொகை மற்றும் அபராதத் தொகை அல்லது தவணை முதல் இருப்பின், அதனை குத்தகைதாரருக்கு பிரதேச செயலாளர் அறிவிப்பார்.

வரி அறவிடுவதில் காணி பயன் படுத்தும் நோக்கத்திற்கு ஏற்ப மதிப்பீட்டு பெறுமதியின் அறவிடும் சதவீதம் வேறுபடும். வெளிப்படையாக தங்குமிட நடவடிக்கைக்காக மதிப்பீடு பெறுமதியின் 4% ஆக அறவிட்டாலும், புண்ணிய நடவடிக்கைகளுக்கு மதிப்பீட்டு பெறுமதியின் ½% மாத்திரமே அறவிடப்படும்.

இது தவிர வேறு பல்வேறு நடவடிக்கை களுக்கு மதிப்பீடு திணைக்களம் ஊடாக காணிகளுக்கு அல்லது கட்டடங்களுக்கு மதிப்பீடு செய்யப் படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு பெறுவது பிரதேச செயலாளரினால் முன்னெடுக்கப்படும் உத்தியோகபூர்வ பணியாக இருப்பதுடன், தனியாக அரசாங்க காணிக்கான மதிப்பீட்டினை பெறுவதற்கு வாய்ப்பு இல்லை.

அவ்வாறே, அந்த மதிப்பீடு தொடர்பில் திருப்தி அடையாதவர், அது குறித்த மேன்முறையீட்டினை பிரதான மதிப்பீட்டுக்கான காரணங்களுடன் சமர்ப்பிக்க முடியும். இந்த மேன்முறையீட்டினை பிரதேச செயலாளர் ஊடாகவே முன்னெடுக்க முடியும்.

அதனைத் தவிர பிரதேச செயலாளர் ஊடாகவும் காணிப் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பம் உள்ளது. பெறுமதியை உறுதிப்படுத்தும் போதும், சான்றிதழ் விநியோகிக்கும் போதும் அந்த செயற்பாடு முன்னெடுக்கப் படும். நபர்களின் வேறுபட்ட தேவை களுக்காக பிரதேச செயலாளரினால் சொத்து மற்றும் வருமான சான்றிதழ் விநியோகிக்கப்படும். விசேடமாக, வருமானத்தினை உறுதிப்படுத்து வதற்கு, நீதிமன்றத்தில் பிணை வைப்பதற்கும் சொத்து சான்றிதழ் விநியோகிக்கப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் காணி மதிப்பீடு செய்யும்போது, பிரதேச செயலாளரி னால் காணியின் அளவு, அதன் எல்லை காணி ஊடாக முன்னெடுக்கக் கூடியதுடன், அபிவிருத்தியில், காணிக்கான பிரவேச வழி, நீர், தொலைபேசி, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் குறித்து அவதானமாக இருந்தே காணி மதிப்பீடு முன்னெடுக்கப்படும். தொடரும்...

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்



செல்வசிகாமணி (ஓய்வுநிலை அதிபர்)-சென்றல்கேம்ப்

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

சித்த ஆயுள்வேத வைத்தியத் துறையிலே தனது இறுதிக்காலம் வரை இலவச மருத்துவ சேவை செய்து முடிசூடா மன்னனாக வாழ்ந்த திரு. பொன்னையா சீனித்தம்பி அவர்களைக் குறிப்பிட்டிருந்தேன். அவர்களின் சேவைக் காலத்தில் அவரது நான்கு மகன்மார்களும் அவருக்கு உறுதுணையாக சேவையில் பங்காற்றி இருந்தாலும் அவரது இறப்பின் பின்னர் அவர்கள் அதனைத் தொடரவில்லை. ஆனாலும் அவரது நான்காவது மகனான திரு.சீ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பிரபல சோதிடராக இன்றும் திகழ்கின்றார் அத்துடன் அவரது இரு பெண் பிள்ளைகள் இன்று விஞ்ஞான துறையில் கல்விகற்று சித்த ஆயுள் வேத வைத்தியத்துறையில் பல்கலைக் கழகத்தில் பயின்று வருகின்றனர். இது அமரரான பாட்டனார் சீனித்தம்பி அவர்களின் புகழுக்கு மேலும் மகுடம் வைத்தாற்போல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இனி அடுத்ததாக சித்த ஆயுள்வேத வைத்தியத்துறையில் பல்துறையில் சிறுவர், பெண்கள், வயோதிபர் என அனைவருக்குமான வைத்திய சேவை செய்து அமரரான திரு. அருணாசலம் முத்துலிங்கம் அவர்களைப் பற்றிய தகவல்களைத் தரலாம் என எண்ணுகின்றேன். இவர் இலக்கம் 11/103, மத்தியமுகாம் எனும் முகவரியில் வாழ்ந்தவர். இவரது வைத்திய முறையானது சிறுவர் மற்றும் பெண்கள், வயோதிபர்களுக்கான நோய்கள் குறிப்பாக சளி, கரப்பான், கிரந்தி, வாதம், தலைவலி போன்ற நோய்களுக்கான மருந்துகள், தைலங்கள் போன்றவற்றை வாகட முறைப்படி இவரே தயாரித்து வழங்குவதன் மூலம் குணப்படுத்துவார். இவற்றோடு இவர் ஒரு கால்நடை வைத்தியருமாவார். இவரும் மறக்க முடியாத ஒரு வைத்தியரே.

அடுத்ததாக இன்னுமோர் வைத்தியர் திரு. சுந்தரம்பிள்ளை ஜெகதீசன் அவர்கள் பற்றிய தகவல்களைப் பார்க்கலாம் . இவர் 11/55, மத்திய முகாம் எனும் முகவரியில் தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இவர் ஒருதுறை மட்டுமன்றி பல்துறை வல்லுனர் என்றே கூறவேண்டும். கலைத்துறையில் நாடக எழுத்தாளர், நடிகர், பிரபல பூசாரியார், ஓவியர் இவற்றுடனேயே வைத்தியராகவும் இருந்தார். இவர் இவரது தந்தையார் சுந்தரம்பிள்ளை அவர்களது வழி முறையிலேயே ஆயள்வேத வைத்திய சேவை செய்தவர். குறிப்பாக நாய்க்கடி, விசர் நாய்க்கடி போன்றவற்றிற்கு மருந்து செய்பவராகவே காணப் பட்டார்.

அத்துடன் வயிற்றுப் போக்கிற்கான மருந்துகள், பெண் நோய்களுக்கான மருந்துகள் களிம்புகள் போன்றவற்றை அவரே தயாரித்து வழங்கி குணப் படுத்துவார். அதுபோன்று மாந்திரீக பரிகாரங்களும் செய்து குணப் படுத்துவார். தற்போது வயோதிபம் காரணமாக சுயநினைவின்றி இருக்கும் இப்புண்ணியவாளரின் சேவையும் மகத்தானது.

இதே ஊரில் ஆயுள்வேத முறையில் சில குறிப்பிட்ட காலம் சேவையாற்றிய இருவரைக் குறிப்பிடலாம். ஒருவர் திரு.கே. மார்க்கண்டு அவர்கள். இவர் ஒரு கிராம சேவகருமாவார். இவரை மார்க்கண்டு விதானை என்றே அழைப்பார்கள். இவரும் திரு. பொன்னையா சீனித்தம்பி அவர்களுடன் வைத்தியக் கலையை கற்றவர் என்று கூறப்படுகின்றது. ஆனாலும்



இவர் கிராம சேவகர் வேலையோடு இதனையும் செய்தமையால் பெரிய அளவில் நீண்ட காலம் செய்யாவிடினும் ஆங்கில வைத்தியம் பற்றிய அறிவும்வசதியும் இல்லாத காலத்தில் இம் மனிதர்கள் சேவை அதிலும் சர்ப்பவைத்தியம் என்பது விஷம் தீண்டியவரை உயிர் காப்பதானது சாதாரண விடயமல்ல பெரும் சவாலான கடமையாகும். அவ்வாறான சேவையை ஆற்றிய நம் மூத்த வைத்தியர்களை நினைவு படுத்துவதும் கௌரவப் படுத்துவதும் நம் தலையாய கடமையாகும்.

அதுபோன்று இன்னுமொரு சர்ப்ப வைத்தியராக சிலகாலம் சிறந்த சேவையாற்றி இளமையிலேயே இறையடி சேர்ந்த திரு. மூத்ததம்பி செல்வராசா அவர்களைப் பற்றிய தகவல்களைத் தருகின்றேன். இல. 11/126, மத்தியமுகாம் எனும் முகவரியில் வாழ்ந்தவர். இவர் வாலிபராக இருக்கும்போது சர்ப்ப வைத்தியத் துறையைக் கற்றுக் கொண்டு பொது மக்களுக்காக நல்ல பெயரோடு சேவையாற்றிக் கொண்டு இருந்தவர். அப்போது இவரது சேவையைப் பற்றி பலரும் புகழ்ந்து பாராட்டுவர். அவ்வாறிருந்த திரு. மூத்ததம்பி செல்வராசா அவர்கள் துரதிஸ்டவசமாக இளமையிலேயே இறையடி சேர்ந்தமையால் மக்களுக்கு அவரது சேவையை நீண்டகாலம் பெற முடியவில்லை. அவர்களையும் நாம் மறக்க முடியாது. அவரது சேவைக்கும் நாம் தலை வணங்கி நன்றி கூறுவோம்.

தொடரும்...

# தாய்ப் பாலூட்டல்

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் - நாவிதன்வெளி.



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

## தாய்ப்பாலூட்டும் போது ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள்.

- உள்வாங்கப்பட்ட முலைக்காம்பை கர்ப்ப காலத்தில் சரிப்படுத்த முடியாது போனாலும் கவலைப்படத் தேவையில்லை. சரியான இணைப்பின் மூலம் மார்பின் கறுப்புப் பகுதியில் பெரும் பகுதி குழந்தையின் வாயினுள் செல்லும் போது இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது.

- குழந்தை பிறந்தவுடன் எவ்வளவு விரைவாக தாய்ப்பாலூட்ட முடியுமோ அவ்வளவு விரைவாக 30 நிமிடம் தொடக்கம் ஒரு மணித்தியாலத்திற்குள் தாயப்பாலூட்டல் சிறந்தது. மேலும் குழந்தையின் உறுஞ்சுகை மிகவும் நன்றாக செயற்படுத்தப்படுவது குழந்தை பிறந்து 20 தொடக்கம் 30 நிமிடங்களில் ஆகும். இதன் பின்னர் இந்த செயற்பாடு குறைந்துவிடும்.

- முதன்முதலில் சுரக்கப்படும் கடும்புப் பால் மிகவும் நோய் எதிர்ப்பு சக்தி கூடியது. எனவே அந்தப்பாலை கட்டாயம் குழந்தைக்கு கொடுக்க வேண்டும். அது மெல்லிய நீரத்தன்மை போல் இருப்பதால் சிலர் அதனை குழந்தைக்கு கொடுப்பதில்லை.

- குழந்தை அழுது கொண்டிருப்பதனால் பால் குறைவு என்று நினைப்பது தவறு. பல்வேறு காரணங்களினால் குழந்தை அழக்கூடும். குழந்தைக்கு தேவையான பாலின் அளவில் ஆண் குழந்தை பெண்குழந்தை என்ற வேறுபாடில்லை. இரு குழந்தைகளுக்கும் தேவையான பாலின் அளவு ஒன்றாகவே காணப்படும்.

- இரட்டைக் குழந்தைகளுக்கு தாய்ப் பாலூட்டும் போது ஒரே நேரத்தில் மார்பகங்களில் அணைத்துக்கொண்டு தாய்ப்பாலூட்டல் சிறந்தது. இதனால் தாய்க்கு ஏற்படும் நோவை குறைத்துக் கொள்ள முடியும். அத்தோடு பெட்டிப் பால் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களை விட்டுப் போய்விடும்.

- தாய்ப்பாலூட்டும் போது முலைக் காம்பு வெடிப்பு ஏற்படுவதை தடுப்பதற்கு தாய் பாலூட்டும் நிலை யையும் இணைப்பையும் சரி செய்ய வேண்டும். மிகவும் வேதனையாக இருந்தால் பால் கறந்து கொடுக்க வேண்டும். பிற்பகுதியில் வரும் பாலை எடுத்து வெடித்து புண்ணாகிய முலைக்காம்பில் பூச வேண்டும். வீங்கிய மார்பகங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மார்பிலுள்ள பாலைக் கறந்து வெளியேற்ற வேண்டும். சிறிது சூடான அழுத்தங்களைப் பிரயோகித்து தொடர்ந்து தாய்ப்பாலூட்ட முடியும்.

- தாய்பாலூட்டும் குழந்தையின் நிறை அதிகரிப்பு குறைவாக இருந்தால் சிலவேளை குழந்தை முற்பகுதி தாய்ப் பாலை மட்டும் எடுப்பதாக இருக்க லாம். எனவே காரணத்தை இனங் கண்டு ஒரு குறித்த மார்பில் குழந்தை தாய்ப்பால் அருந்தி இம்மார்பை விடும்வரை பொறுமையாக அனுமதிக்க வேண்டும். குழந்தை இன்னும் பசியோடு உள்ளதாக உணர்ந்தால் மேலும் மற்றைய மார்பில் பாலூட்ட வேண்டும் . வேலைக்கு செல்லும் தாய் எவ்வாறு குழந்தைக்கு தாய்ப்பாலூட்ட முடியும்.

- நீங்கள் தொழிலுக்குச் செல்லும் போது தாய்ப்பாலை கறந்து வைத்து குழந்தை பருகுவதற்கு பழக்க வேண்டும்.

- கறந்த பாலை அறை வெப்ப நிலையில் 6 மணித்தியாலங்களுக்கும் குளிரூட்டியில் பிரதான பாகத்தில் 24 மணித்தியாலங்களுக்கும், குளிரூட்டி யில் உறையும் பகுதியில் 3 மாதங்களுக்கு களஞ்சியப்படுத்தவும் முடியும்.

- குளிரூட்டியில் வைக்கும் பால் குழந்தை பருகுவதற்கு முன் சூடாக்கப் பட வேண்டும். ஒரு போதும் அடுப்பில் வைத்து சூடாக்கப்படக் கூடாது. சுடுநீரில் 10 நிமிடங்கள் அமிழ்த்திவைத்து பாலை சூடாக்கிக் கொள்ளலாம்.

- கறந்து வைத்த பாலை கிண்ணம் அல்லது கரண்டியை பாவித்து குழந்தைக்கு பருக்குவது சிறந்தது. ஒருபோதும் சூப்பியையோ போத்தலையோ பயன்படுத்த வேண்டாம்.

தொடரும்...



# சர்க்கரைவள்ளிக் கிழங்கு ஓட்ஸ்

2 நபர்களுக்குப் பரிமாறக்கூடிய அளவு

**தயாரிக்கும் நேரம்:** 10 நிமிடங்கள்
**சமைக்கும் நேரம்:** 20-30 நிமிடங்கள்

R.Rupiga - Development Officer, Navithanveli

## தேவையான பொருட்கள்:

* சதுரங்களாக வெட்டப்பட்ட 100 கிராம் சக்கரைவள்ளிக்கிழங்கு.

* ¾ கோப்பை ஓட்ஸ்.

* 400 மில்லிலீற்றர் பசும் பால்.

* 2 தேக்கரண்டி சக்கரை (தேவைப்பட்டால்).

## செய்யும் முறை :

* ஒரு பாத்திரத்தில், குறைந்த வெப்பத்தில் பால் மற்றும் ஓட்ஸைக் கொதிக்க விடவும்.

* கொதித்தவுடன், சக்கரை வள்ளிக்கிழங்கு மற்றும் சக்கரையைச் (விரும்பினால்) சேர்க்கவும்.

* ஓட்ஸ் மற்றும் சக்கரை வள்ளிக்கிழங்கு நன்றாக வெந்து, கெட்டியாகும் வரை குறைந்த வெப்பத்தில் வேக விடவும்.

* பின்னர் சூடாகப் பரிமாறவும்.





# பெண்களுக்கு எதிராய் இழைக்கப்படும் வன்முறைகளும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும்

ஏ.எம். கஸ்பியா வீவி - பிரதேச செயலகம், அட்டாளைச்சேனை

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

இதனால் சந்தர்ப்ப சூழ்நிலை கைகூடி வரும் வேளையில் பெண்களும் ஆண்களும் தமது இச்சைகளை தீர்த்துக் கொள்வதற்கு முனைகின்றனர். இதன் காரணமாக அறிமுகமற்ற நபர்கள் மூலம் சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையம் ஊடாக தகாத நபர்களுடன் தொடர்பு ஏற்படுத்தி தமது அந்தரங்க தகவல்கள் புகைப்படங்கள் என்பவற்றை பகிர்கின்றனர். இவற்றை அவர்கள் பணம் பெறும் நோக்கோடும் ஏனைய தேவைகளுக்காகவும் செயற்கை தொழில் நுட்ப முறை மற்றும் ஏனைய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி திரிபு படுத்தி பெண்களை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி வருகின்றனர். இதன் காரணமாக பெண்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப் பட்டுள்ளதோடு தமது பிள்ளைகளின் எதிர்காலம் குடும்ப மானம் என்பவை இழக்கப்படுவதன் காரணமாக பெண்கள் தமது கணவர்களிடமிருந்து தாமாகவோ அல்லது கணவன் மூலமாகவும் விவாகரத்து பெறக்கூடிய நிலைமை சமூகத்தில் இன்று சர்வ சாதாரணமாக மாறி உள்ளது.

தற்கால கட்டத்தில் ஓரினச்சேர்க்கை சமூகத்தில் அதிகரித்துச் செல்கின்றது. ஆண்களும் பெண்களும் வெளிநாடு களுக்கு இடம் பெயர்ந்து செல்வதனால் தத்தமது துணைகளைப் பிரிந்து இருக்க முடியாததன் காரணமாக தமக்கு அன்பு மற்றும் பாசம் கிடைக்கும் இடத்தில் நமது ஆசைகளையும் இச்சைகளையும் தீர்த்துக் கொள்ள முனைகின்றனர். இதனால் பெண்களிடமிருந்து விலகி இருப்பதற்கு அவளை உடல், உள ரீதியில் பல்வேறு துன்புறுத்தலுக்கு ஆளாக்குகின்றனர். போலியான கதைகளை இட்டுக்கட்டி அவளை மானபங்கப் படுத்துகின்றனர். இதேபோல் பெண்களும் ஆண்களில் நாட்டம் இல்லாததால் தனது வெறுப்பை கணவரிடம் காட்டி தனக்குத்தானே நோவினை ஏற்படுத்திக் கொள்ளும் தன்மை காணப்படுகின்றது. இதற்கு சமூக வலைத்தளங்களில் உலாவரும் பல்வேறு வகையான வீடியோக்களும் புகைப் படங்களும் எமக்கு சான்று பகர்கின்றன.

தொழில் காரணமாக வேலைக்குச் செல்லும் பெண்கள் தொழில் நிலையங்க ளில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். பதவி உயர்வு, மேலதிக நேரக் கொடுப்பனவு உள்ளிட்ட சலுகைகள் அதிகம் தருவதாகக் கூறி உயர் அதிகாரிகளால் பாலியல் லஞ்சம் கோரப்படுகின்றது. பல குடும்பப் பெண்கள் தமது குடும்ப சூழ்நிலை காரணமாக தமது மானத்தை இழந்து தூக்கிட்டு உயிர் துறக்கும் நிலையும் குடும்பங்களை இழக்கும் நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறு சமூகத்தில் காணப்படும் பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற பாலின வன்முறைகளை குறைப்பதற்கு பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. பாலின வன்முறைகளை குறைப்பதற்கான செயலணிகள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வீதி நாடகங்கள், விழிப்புணர்வு கருத்தரங்கு, பொதுமக்கள் கூடும் இடங்களில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளும் அதற்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் வருகின்றன. இது தவிர பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளை பதிவு செய்வதற்கு 24 மணி நேர அவசர தொலைபேசி இலக்கம் மூலம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு தனி ஒரு தொலைபேசி இலக்கத்தை எமது நாட்டு அரசாங்கம் ஏற்படுத்தி அதன் மூலம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன. 1938 தொலைபேசி இலக்கம் மூலம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன. இவைகள் சிறந்த முறையில் விசாரிக்கப்பட்டு பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படுகிறன.

இவை தவிர பாடசாலைகளில் உயர்தரம் மற்றும் சாதாரணதர மாணவர்களுக்கு இளவயது திருமணம் மற்றும் அதன் விளைவுகள் தொடர்பாகவும், பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றை விட சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சின்கீழ் பல்வேறு அரச அதிகாரிகள் நியமிக்கப்பட்டு பெண்கள் மற்றும் சிறுவர்களை பாதுகாப் பதற்கும் அவர்களை வலுவூட்டுவதற்கா கவும் பல்வேறு நடவடிக்கைகள் கிராம மட்டங்களில் முன்னெடுத்து வருகின்றன. இவர்களுக்கு பக்க பலமாக பல்வேறுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்களும் தங்களால் ஆன உதவிகளை முன்னெடுத்து பெண்களை வலுவூட்டி சமூகத்தில் சிறந்த ஓர் ஆளுமையாக இருப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இது தவிர குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்டு வரும் பெண்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகள் வழங்க படுவதோடு தமது வழக்குகளை வாதாடுவதற்கு வக்கீல்களும் நியமிக்கப் பட்டு பெண்களின் பிரச்சனைகள் தீர்ப்பதற்கு எமது நாட்டில் சட்ட உதவி ஆணைக்குழுவின் பங்கு விசேடமானதாகும். காதி நீதிமன்றங்கள் மூலமாகவும், நீதவான் நீதிமன்றம், உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம் என சட்ட ஏற்பாடு ஊடாக மேலதிக வழக்குகள் விசாரணை செய்து அதற்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப் பட்டு வருகின்றன. இங்கு வழங்கப்படும் சிறந்த தீர்ப்புகள் மீண்டும் ஒருமுறை சமூகத்தில் இத்தகைய நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு வழி வகுக்கின்றன.

ஒட்டு மொத்தமாக நோக்கும்போது பெண் என்பவள் மென்மையான சாந்தமான படைப்பாக இறைவனால் படைக்கப்பட்டாலும் தமது வாழ்நாளில் பெண் என்ற காரணத்தினால் பல்வேறு துன்பங்களை அனுபவிக்க நேரிடுகின்றது. எனவே சமூகப் பொறுப்பு மிக்க ஒவ்வொருவரும் பெண்கள் விடயத்தில் அதிக அக்கறை செலுத்தி பெண்களை மதித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றி சமூகத்தின் விடிவுக்காய் அவர்களையும் பங்கு தாரர்களாக இணைத்துக் கொண்டு சமுதாயத்தின் விடிவுக்கான பாதையில் முன்னோக்கி செல்வோம்.



# தாத்தா பாட்டி மூலிகை வைத்தியத்தின் பயன்பாடும் முக்கியத்துவமும்

கி.யோகலிங்கம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

அந்தக் காலங்களில் வீட்டுக்கு வீடு தாத்தா, பாட்டிகள் மிகுந்த ஆரோக்கியத்துடன் இருப்பார்கள். குழந்தைகள் முதல் பெரியவர்வரை யாருக்கு எந்த நோய் வந்தாலும் அதற்கான மூலிகைகளை கொண்டு கை வைத்தியம் செய்தே குணப்படுத்தி விடுவார்கள். ஆனால் இன்று தாத்தா பாட்டிகளோ வீட்டில் இல்லை பணம், வேலை என்று பெற்றோர் நகர வாழ்க்கையை தேடிச்செல்வதால் தாத்தா பாட்டிகளின் முக்கியத்துவம் இன்றைய பிள்ளைகளுக்கு தெரியாமல் போய்விட்டது. உண்மையிலேயே இந்தக்கால குழந்தைகள் கொடுத்து வைக்காதவர்கள் என்றே கூற வேண்டும். அன்று அந்த தாத்தா பாட்டிமார்களின் அரவணைப்பில் பாதி வருத்தம் பறந்தே போய்விடும். சிறிய தும்மல், தலைவலி முதல் பிரசவம் வரை மூலிகை வைத்தியம், கை வைத்தியம் எனக்கூறி ஏதோ ஒரு மூலிகையை பிடுங்கி உரல், அம்மியில் வைத்து அரைத்து கசாயம் கொடுத்து விடுவார்கள் நோயும் பறந்து விடும் ஆனால் இன்று கசாயம் அரைத்துக் கொடுக்க பாட்டிமாரும் இல்லை கசாயம் குடிக்க மறுக்கும் பேரனை பேத்தியை ஓடிப் பிடித்து மடியில் வைக்க பாட்டனும் இல்லை. இருந்தாலும் தாத்தா பாட்டிகளின் குறையைப்போக்க அவர்கள் பயன்படுத்திய மூலிகைகள் பல நம்மிடையே உயிர் வாழ்கின்றன. நாம் நமது வீடுகளில் மலர்ச்செடிகளை மட்டும் வளர்த்து அழகை ரசிக்கின்றோம். நம் ஆரோக்கியத்தை மறந்தவர்களாக அழகையும் ரசிப்போம் ஆரோக்கியத்தையும் சீராக்குவோம். இந்த வகையில் நம் ஒவ்வொருவர் இல்லத்திலும் பேணிப்பாதுகாத்து வளர்க்கப்படவேண்டிய ஒரு சில மூலிகைச் செடிகளின் பயன்பாடுகள் பற்றி பார்ப்போம்.




துளசி இலையுடன் மிளகு, வெற்றிலை மற்றும் வேம்பு பட்டை ஆகியவற்றை சேர்த்து கசாயம் வைத்து குடித்தால் காய்ச்சல் குணமாகும். துளசி இலையை அவித்து இடித்து சாறு பிழிந்து தேனுடன் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்தால் சளி குணமாகும். துளசி இலையை சாதாரணமாக மென்று தின்றால் ஜீரண சக்தி அதிகரிப்பதோடு பசியும் அதிகரிக்கும்.

## சோற்றுக் கற்றாளை



இது இளம் பெண்களுக்கு வரும் எல்லா நோய்களையும் குணப் படுத்தும் மூலிகையாகும். இதனால் குமரிக்கற்றாளை என்றும் கூறுவது உண்டு. சோற்றுக் கற்றாளையை வெட்டி பச்சைத் தோலை நீக்கி 7,8 முறை தண்ணீர் விட்டு கழுவ வேண்டும். ஒரு கிலோ கற்றாளைக்கு ஒரு கிலோ கருப்பட்டியை தட்டிப் போட்டு அடுப்பில் வைத்து கிளற வேண்டும். கருப்பட்டி கரைந்து பாகுப் பருவம் வந்ததும் ¼ கிலோ பூண்டினை உரித்து போட்டு மீண்டும் கிளற வேண்டும். பூண்டு நன்கு வெந்ததும் இறக்கி மத்தினால் கடைந்து அல்வா பதத்திற்கு வந்தவுடன் காலை, மாலை, இரவு மூன்று வேளைகளில் 01 மேசைக்கரண்டி அளவு சாப்பிட்டு வந்தால் (உணவுக்குப்பின்) பெண்களுக்கு வெள்ளைபடுதல், நீர்க் கட்டிகள் , நீர் எரிச்சல், மாதவிடாய் கோளாறுகள், பெண் மலடு ஆகியவை உடன் சரியாகும். ஆண்களும் இதனை சாப்பிட்டால் உடல் சூடு தணிந்து உடல் வலுவாகும். மஞ்சள் கரிசளாங்கண்ணி ஞானத்திற்குரிய மூலிகை இது. இதைக் கீரையாக சமைத்துச் சாப்பிட்டால் கல்லீரலானது வலுப்படும்.

## தூதுவளை



தூதுவளையுடன் மிளகு சேர்த்து கசாயம் வைத்து குடித்தால் வரட்டு இருமல் குணமாகும். தூதுவளை பழத்தை வத்தலாக காயவைத்து வதக்கி சாப்பிட்டால் கண் குறைபாடுகள் நீங்கும். தூதுவளையில் கல்சிய சத்து அதிகமுள்ளதால் எலும்பையும் பற்களையும் பாதுகாக்கும் பலப்படுத்தும். இதற்கு தூதுவளை இலையுடன் பருப்பு நெய் சேர்த்து சமைத்து 48 நாட்கள் சாப்பிடவேண்டும்.

தூதுவளையின் முள், செடி, தண்டு, இலை வேர் ஆகியவற்றை நிழலில் 05 நாட்கள் காயவைத்து பொடி செய்து தேன், பாலில் சாப்பிட ஆஸ்துமா குறையும், காது மந்தம், நமச்சல், பெருவயிறுமந்தம், மூக்கில் நீர்வடிதல் பல் ஈறுகளில் நீர் வடிதல், சூலை நோய் என்பன குணமாகும்.




# மாபெரும் புத்தாண்டே மகிழ்வோடு வருக

அருளானந்தம் சுதர்சன் - வீரமுனை

தங்கத் தரணியில் தமிழ்மணம் கமழ
எங்கள் முகங்களில் எழில்நகை தவழ
திங்கள் முகம்போல் மங்கையர் முகம் திகழ
தினம் வரும் கவலைகள் பனிபோல மறைய

ஏழைகள் வாழ்வினில் எழில்நகை கூட
கோழைகள் குவலயத்தில் மறத்தினை தேட
சாலைகள் எங்கும் தமிழ்ச் சரித்திரம் பாட
தோல்விகள் இல்லா வாழ்வு துணிவுடன் நீள

அகங்களில் அன்பு அலைமோதித் திரிய
முகங்களில் நேசம் முழுதாக மலர
கரங்களில் கண்ட கனவுகள் கிட்ட
மனங்களில் மகிழ்வு குறைவின்றி நிறைய

வன்குணங் கொண்ட மாந்தர் மண்ணினில் மாய
நற்குணமுள்ள ஆன்றோர் நலமுடன் வாழ
எக்கணமும் இறைவன் அருளது கிட்ட
நிர்க்கதியின்றி வாழ்வில் வளம்பல பெருக

மண்ணினில் நல்மாரி மகிழ்வுடன் பொழிய
சேற்றில் வயல் நெல்மணி செழிப்பாக விளைய
சோற்றில் மானிடம் பசி போக்கி மகிழ
ஈற்றில் யாவரும் பல்லாண்டு காலம் வாழ

மதியில் மறுவின்றி அறிவுகள் பெருக
நற் கதியினில் உயிர்களின் கருமங்கள் இணைய
தெருவில் விபத்துக்கள் கருவோடு ஒழிய
தாய்க் கருவில் உயிர்களும் கனிவாக மலர

போதைப் பொருட்களின் புலம்பல்கள் ஒழிய
பேதைக் கூட்டத்தினரின் பெரும் பலி அகல
உபாதைகள் இன்றி உடல் நலம் பெருக
அநாதைகள் இன்றி உலகம் உறவுடன் மலர

தற்கொலை எண்ணம் தரணியில் குறைய
நற்கலை எல்லாம் பூமியில் தவழ
எக்கணமும் இறைபக்தி மனிதரில் எழ
எண்ணத்தில் நன்மைகள் சிகரமாய் வளர

கல்விகள் கற்றுக் கலைகள் பல பரவ
கடல் கடந்தும் பல சாகசம் பெருக
பண்புகள் மாறா நற்பழமைகள் பேண
அன்பினில் அறிவுடன் வையகம் சுடர்விட்டு வீச

ஆதவனைக்கண்ட பனிபோல் பாலகர் வன்கொடுமை பறக்க
மாபெரும் சபைகள் கண்டு மாணவர் சமூகம் உயர
தீவிரவாதம் கொண்ட தீயவர் மண்ணில் புதைய
ஓரினமாக மனிதர் பாரினில் கூடி மகிழ

பாவங்கள் பகைகள் மண்ணில் புதையுண்டு போக
பண்புகள் பழமரபுகள் மனதினில் சுடர் விட்டு வீச
சோகங்கள் துயர்கள் அன்பால் துரத்தியே ஓட
சொப்பனங்கள் யாவும் கையில் மெய்ப்பட்டு சேர

எலிகள் விருந்தில் பருந்துகள் மகிழ
ஏகாந்த ஒற்றுமை மனங்களில் மிளிர
குழிகளில் நரிகளின் வஞ்சகங்கள் வீழ
மொழிகளில் உண்மைகள் மானிடம் பேச

மகிழ்வுடன் மாந்தர் மனையில் திருவளம் செழிக்க
மானிட மனங்களில் மனிதங்கள் நிலைக்க
மாபெரும் புத்தாண்டே மகிழ்வோடு வருக
மானிட நேயம் மண்ணில் மலர்திடச் செய்க



## கொரோனாவின் இழப்புக்கள்

அரவம் உண்டதால் வந்தது விஷம்
ஆயிரம் உயிர்களை கொன்றது நிதம்
இதுதான் கொரோனா என்றது சனம்
ஈவு இரக்கமின்றி தொற்றுது தினம்

உடமைகள் பலவற்றை உண்டது கொரோனா
ஊமைகளாய் எம்மை ஒதுக்கியது கொரோனா
எம்மவர் உறவுகளை தனிமையாக்கியது கொரோனா
ஏக்கத்துடன் தினமும்; வாடவைத்தது கொரோனா

ஐயமின்றி துணிந்து அழிக்கிறது உயிர்களை
ஒவ்வொரு பாகமாய் சிதைக்கிறது உடலதை
ஓவென்ற புலம்பலுடன் மடிகின்றனர் மழலைகள்
ஔடதம் இதற்கின்றி அலைகின்றனர் மானிடர்

உறவுகளைப் பிரித்து உயிரதையும் குடித்தாய்
ஒற்றுமையின் தழுவல்களை ஒதுக்கிவிட்டு மிதித்தாய்
இனியொன்றும் இழப்பதற்கு இல்லையிந்த மண்ணில்
இறந்தாலும் உனைவெல்ல வந்திடுவோம் விண்ணில்

## நிலா

கண்சிமிட்டும் மனையாள் கூட்டத்திற்கு தண்ணொளி பாய்ச்சி
விண்ணில் பவனி வரும் இரவுத்தலைவன்

## மழை

மண்ணின் தாகம் தீர்க்க
விண்ணவள் அழும்
விநோதக் கண்ணீர் மழை

## மரம்

மனிதன் புதைத்த குழியில் விழுந்து
பாசம் மறந்த மனிதனுக்கும்
சுவாசம் கொடுக்கும் தரு

## மழைக்காலம்

பூப்பெய்திய மண்மகள் புழுதிகட்டி
நீராடக் காத்திருக்கும்
புனிதமான பொன்நாள் மழைக்காலம்

# மூத்த நடனக்கலைஞர் மகேஸ்வரி ஜோசப்

ஏ.எல்.எம்.ஷினாஸ், கே.நீலேந்திரன்



கல்முனையைச் சேர்ந்த விக்டோரியா - வசந்த கோகிலா தம்பதியினருக்கு 1951.04.29ஆம் திகதி மகளாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரியில் பயின்றார். தனது 12ஆவது வயதில் பாடசாலைப் பருவத்தில் இருந்தே நடனக் கலையை ஆர்வத்துடன் பயின்றுள்ளார். பின்னர் க.பொ.த (சாதாரண தரம்) சித்தியடைந்த நிலையில் நடனக்கலையில் இருந்த ஆர்வம் காரணமாக உயர்கல்வியினைத் தொடராமல் கல்முனையைச் சேர்ந்த கைலாச பிள்ளை என்பவரை குருவாக ஏற்று நடனக் கலையைப் பயின்றுள்ளார்.

பாடசாலைக் காலங்களில் மாணவர் மன்றம், வாணிவிழா, தேவாலயங்கள் போன்றவற்றில் நடைபெற்ற கலை நிகழ்வுகள், ஒளி விழாக்கள் போன்ற நிகழ்வு களில் எல்லாம் பங்குபற்றி சான்றிதழ்களையும் கௌரவங் களையும் பெற்றுள்ளார். பாடசாலைக் கல்வியை விட்ட பின்னர் இவர் சிறுபிள்ளைகளுக்கு தான்பயின்ற கலையை பயிற்று வித்து அம்மாணவர்களைக் கொண்டு பல கலை நிகழ்வுகளை அரங்கேற்றி கௌரவப் படுத்தி உள்ளார்.

இவரிடம் கலையைப் பயின்ற பலர் இன்றும் சிறந்த நடன ஆசிரியர்களாக திகழ்வதாக எம்மிடம் கூறினார். இவர் 1972ஆம் ஆண்டு அவரது 21வது வயதில் கல்முனையைச் சேர்ந்த கந்தசாமி யோசப் என்பவரை திருமணம் செய்து கொண்டார். ஐந்து பிள்ளைகளுக்கு தாயான இவர் 2008ஆம் ஆண்டு நாவிதன் வெளி கிராமத்தில் குடியேறி முதியோர் வீட்டுத்திட்டம், நாவிதன்வெளி-01 எனும் முகவரி யில் நிரந்தரமாக வசித்து வருகின்றார்.

2018ஆம் ஆண்டு நாவிதன் வெளிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இலக்கிய விழாவில் சிரேஷ்ட பிரஜைகளுக்குரிய நடன நிகழ்வில் பங்குபற்றி பரிசுகளையும் வென்றெடுத்துள்ளார். தற்போது கணவரை இழந்த இவர் தனது பிள்ளைகள் அனைவரும் திருமணம் செய்து கொண்ட நிலையில், தற்போது தனித்து வாழ்ந்து வருகினறார்.

இவர் தற்போது தான் கற்றுக் கொண்ட நடனக்கலையை மாணவர்களுக்கு பயிற்றுவிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார். இது தனக்கு மன மகிழ்ச்சியை தருவதாகவும் தெரிவித்தார். தனது இளமைக்கால அரங்கேற்ற நிகழ்வுகளை மக்கள் மிகவும் ஆர்வத்துடன் கண்டு களித்ததாகவும் தனது ஆரம்பகால அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

தற்போது சினிமாத்துறையில் உள்ள மோகம் காரணமாக மக்கள் நடனக்கலையுடன் தொடர்புபட்ட மேடை நிகழ்வுகளில் ஆர்வம் செலுத்துவதில்லை என்பதோடு இன்றைய இளம் சந்ததிகள் தனது பணியை தொடரவில்லை என்பதையும் மனவருத்தத்துடன் தெரியப்படுத்தினார்.

மகேஸ்வரி ஜோசப், 2020இல் விபத்தொன்றில் சிக்கி தனது ஒரு கையின் செயற்பாட்டினை இழந்த நிலையில் பிரதேச செயலக விசேட தேவையுடையவர் களுடன் இணைந்து செயற்பட்டு வரும் இவர், கலை நிகழ்வுகளிலும் தொடர்ந்தும் தனது கலைத் திறமையினை வெளிப்படுத்தி வருகின்றார்.

இவரது கலைப் பயணம் தொடர "நாவெளி" படலையைத்தேடி குழுவினர் சார்பில் வாழ்த்துகின்றோம்.